புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • டிசம்பர் 14, 2023 • புரட்சி 23 • முழக்கம் 48 • விலை ரூ.3.00

## பெரியார் குறித்து நூல் வெளியிட்ட பேராசிரியர் மீது நடவடிக்கையாம்

# எல்லை மீறுகிறார் ஆர்.எஸ்.எஸ் துணைவேந்தர்

**‘பெரியாரின் போர்க்களங்கள்’ ‘மெக்காலே பழமைவாதக் கல்வியின் பகைவன்’ என்ற நூல்களை எழுதியதற்காக சேலம் பெரியார் பல்கலைக்கழக பேராசிரியர் சுப்பிரமணிக்கு பல்கலை துணைவேந்தர் ‘மெமோ’ அனுப்பியுள்ளார்.**

பெரியார் குறித்து நூல் எழுதியதற்காக, சேலம் பெரியார் பல்கலைக்கழக பேராசிரியருக்கு மெமோ வழங்கியதற்கு, பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்துள்ளனர். சேலம் கருப்பூரில் பெரியார் பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. சேலம் உள்பட 4 மாவட்டங்களைச் சேர்ந்த கலை, அறிவியல் கல்லூரிகள் இணைவு பெற்று செயல்பட்டு வருகின்றன. பல்கலைக்கழகத்தில் கடந்த சில ஆண்டுகளாக சமயம் சார்ந்த நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தமிழக அரசின் கொள்கைகளுக்கு எதிராகவும், ஆர்எஸ்எஸ், பாஜகவுக்கு ஆதரவாகவும் நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாக குற்றச்சாட்டு உள்ளது. இந்நிலையில், பெரியார் குறித்து நூல் எழுதியதற்காக, பெரியார் பல்கலைக்கழக நிர்வாகம், அங்கு பணிபுரிந்து வரும் பேராசிரியருக்கு மெமோ வழங்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பல்கலைக்கழகத்தின் இதழியல் துறை இணை பேராசிரியரான சுப்பிரமணி, அங்குள்ள பெரியார், அண்ணா, கலைஞர் ஆய்வு மையங்களின் இயக்குநராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். சமீபத்தில் இவரை, பல்கலைக்கழக சிண்டிகேட் உறுப்பினராக உயர்கல்வித்துறை நியமித்தது. பெரியாரின் போராட்டங்கள் தொடர்பாக இவர் எழுதிய ‘பெரியாரின் போர்க்களங்கள்’ என்ற புத்தகம் கடந்த ஆண்டு வெளியானது.

தொடர்ந்து, ஏற்கனவே இவர் எழுதிய “மெக்காலே ‘பழமைவாதக் கல்வியின் பகைவன்’” என்ற நூலின் மறுபதிப்பு சமீபத்தில் வெளியிடப்பட்டது. நிர்வாக அனுமதி பெறாமல், இந்த நூல்களை எழுதியதற்காக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என விளக்கம் கேட்டு சமீபத்தில் பல்கலைக் கழக நிர்வாகம் பேராசிரியர் சுப்பிரமணிக்கு மெமோ வழங்கியது. கலை, இலக்கியம், அறிவியல், கல்வியியல் மற்றும் கலாச்சாரம் குறித்த கட்டுரைகள், நூல்கள் வெளியிட எந்தவித முன் அனுமதியும் பெறத் தேவையில்லை என்ற விதி உள்ளது. ஆனால், பெரியார் குறித்த புத்தகம் எழுதியதற்காக பேராசிரியருக்கு மெமோ வழங்கப்பட்டிருப்பது சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள பல்வேறு தரப்பினர், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். **விசிக பொதுச் செயலாளர் வன்னிஅரசு வெளியிட்டிள்ள அறிக்கையில், “பேராசிரியர் பணி என்பது மாணவர்களுக்கு வகுப்பெடுப்பது, வாசிப்பது, எழுதுவது தான். தற்போது அதையே செய்யக்கூடாது என பெரியார் பல்கலைக் கழக துணைவேந்தர் முட்டுக் கட்டையாக இருப்பது கண்டனத்திற்குரியது,” என்று தெரிவித்துள்ளார்.**

# ஆர்.எஸ்.எஸ் துணைவேந்தர் அத்துமீறல்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டனம்

*கழகத் தலைவர் இதுகுறித்து மதுரையில் செய்தியாளர்களிடம் கண்டனம் தெரிவித்துள்ளார்.*



பேராசிரியர் சுப்பிரமணி சேலம் பல்கலையில் பெரியார், அண்ணா, கலைஞர் இருக்கையின் தலைவராக உள்ளார். இதழியல் துறை பேராசிரியரும் கூட. தமிழ்நாடு அரசு அண்மையில் அவரை சிண்டிகேட் உறுப்பினராக நியமித்துள்ளது. தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, ஜெகநாதன் என்ற ஆர்.எஸ்.எஸ் சிந்தனையாளரை துணைவேந்தராக நியமித்துள்ளார். அவர் பல்கலை வளாகத்தையே ஆர்.எஸ்.எஸ் கூடாரமாக மாற்றிவருகிறார். ஆர்.எஸ்.எஸ் மாணவர் அமைப்பான ‘அகில இந்திய வித்தியார்த்தி பரிசத்’ அமைப்பில் சேருங்கள் என்று விளம்பரப் பலகை மட்டும் வளாகத்தில் மாட்டப்பட்டுள்ளது. இதற்கு துணைவேந்தர் அனுமதி வழங்கியுள்ளார்.

கடந்த 25 ஆண்டுகளாக பதிப்பு துறை என்ற ஒரு துறையும் இயங்கிவருகிறது. 2008ம் ஆண்டு பெரியார் பெயரில் இயங்கும் இந்த பல்கலையில் பெரியார் இருக்கை உருவாக்கப்பட்டது. இதுவரை 60 பக்க அளவில் பெரியார் குறித்த ஒரு சிறு நூல் மட்டுமே வெளியிடப்பட்டது. வேறு எந்த நூலும் வெளியிடப்படவில்லை. பல்கலைப் பேராசிரியர்கள் பல்கலை சார்பில் பல ஆய்வு நூல்களை வெளியிடுவது வழக்கமானது தான். திருச்சி பாரதிதாசன் பல்கலையில் பெரியார் துறை தலைவராக இருந்த எஸ்.வி.ஆர் பேராசிரியர் சக்குபாய் பெரியார் குறித்த ஆய்வரங்குகளை நடத்தி ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளனர். எம்.அய்.டி பேராசிரியர்களான எம்.எஸ்.எஸ் பாண்டியன், முனைவர் வெங்கடாசலபதி முறையே பெரியார், பாரதி, வ.உ.சி குறித்து ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளனர். இதற்கெல்லாம் பல்கலை துணைவேந்தரிடம் முன் அனுமதி பெற தேவையில்லை. துணைவேந்தர் ஜெகநாதன், பேராசிரியர் சுப்பிரமணி உரிய அனுமதி பெறவில்லை என்று காரணம் கூறுகிறார். பெரியார், மெக்காலே குறித்த ஆய்வுகள், இதழியல் சார்ந்தவை, இதழியல் சார்ந்த வெளியீடுகளுக்கு முன் அனுமதி பெறத் தேவையில்லை என்று பல்கலை விதிகள் தெளிவாக்குகிறது.

ஆர்.எஸ்.எஸ் கொள்கை எதிரிகளாக ஆபத்தான 5 பேரில் மெட்டீரியலிஸ்ட் (பொருள்முதல்வாதம், கடவுளை மறுப்போர்) மெக்காலே ஆகியோரும் அடங்குவர். அந்தக் கண்ணோட்டத்தில் தான் துணைவேந்தர், முறைகேடாக பல்கலை விதிகளுக்கு நேர்முரணாக இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். பெரியார் பெயரில் இயங்கும் பல்கலையில் பெரியார் இருக்கையின் தலைவராக இருக்கும் பேராசிரியர் பெரியார் பற்றிய வரலாற்றை இதழியல் கண்ணோட்டத்தில் எழுதுவதற்கு தடை போடுவது என்பது வன்மையான கண்டனத்திற்குரியது, தமிழ்நாடு உயர்கல்வித்துறை இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கழகத் தலைவர் கூறினார்.

# பெரியார் பல்கலை துணைவேந்தருக்கு இராமதாஸ் கண்டனம்

***சென்னை: பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கை:*** *சமூக அநீதிக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் எதிராக தந்தை பெரியார் நடத்திய போராட்டங்கள் மற்றும் அவற்றின் பயனாக ஏற்பட்ட சமூக மாற்றங்கள் ஆகியவற்றை தொகுத்து ‘பெரியாரின் போர்க்களங்கள்’ என்ற தலைப்பில் நூல் வெளியிட்டதற்காக இரா.சுப்பிரமணி என்ற பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்க சேலம் பெரியார் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருக்கிறது. அவர், இதழியல் துறை இணைப் பேராசிரியராகவும், பெரியார் இருக்கையின் பொறுப்பு இயக்குநராகவும் உள்ளார்.*

*மக்கள் நலன் மற்றும் சமத்துவத்தை ஏற்படுத்தவே பெரியாரின் போராட்ட வரலாறுகளை தொகுத்திருக்கிறார். அதை பாராட்டுவதற்கு மாறாக அவரை பழிவாங்க பல்கலைக்கழக நிர்வாகம் துடிப்பது தவறு. இது தந்தை பெரியாருக்கு எதிரானது. பெரியார் பெயரிலான பல்கலை நிர்வாகிகளாக இருந்து கொண்டு, பெரியாருக்கு எதிராக செயல்படும் இவர்கள் யாருடையாக கருவிகளாக இருப்பார்கள் என்ற ஐயம் எழுகிறது. எனவே பேராசிரியர் மீது நடவடிக்கை எடுக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று அந்த பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசு ஆணையிட வேண்டும்.*

## தலையங்கம்

# அயோத்தி அரசியல்

அயோத்தி அரசியலை தீவிரமாக முன்னெடுத்து நாடாளுமன்றத் தேர்தலில் ‘இராமனை’ ஓட்டு வங்கியாக மாற்றும் நடவடிக்கைகளில் உத்திரபிரதேச மாநில அரசும், ஒன்றிய அரசும் தீவிரம் காட்டி வருகின்றன. வருகிற ஜனவரி 22ல் இராமன் கோயில் திறக்கப்பட இருக்கிறது. இராம ஜென்ம பூமி அறக்கட்டளை ரூ.1800/- கோடி செலவில் பாப்ரி மசூதி இருந்த இடத்தில் இந்த கோயிலை கட்டி முடித்திருக்கிறது. இதனால் அயோத்தியில் வீட்டுமனைகளின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளதாக உத்திரபிரதேச வருவாய்துறை அமைச்சர் கூறுகிறார். சர்வதேச விமான நிலையம் அமைக்கப்பட்டுள்ளதோடு எதிர்வரும் ஆண்டுகளில் ரூ.4500/- கோடி செலவில் நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் புதிய நகரங்களை உருவாக்க தனியாருக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. விழாவின் கதாநாயகன் பிரமர் மோடி இராமன் சிலையை சுமந்து வந்து கர்ப்ப கிரகத்தில் நிறுவப் போகிறார் என்பதில் இருந்தே இதற்கு பின்னால் உள்ள அரசியலை புரிந்துகொள்ள முடியும்

கோயில் கர்ப்பகிரகம் புனிதமானது என்றும் அதில் பிராமணர்கள் மட்டுமே பூஜை செய்ய முடியும் என்றும் ஆகமங்களை தூக்கிக் கொண்டு பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் வரை போகிறார்கள். கடந்த வாரம் ராமஜென்ம பூமி அறக்கட்டளை தலைவர் சம்பத் ராய் ராமன் பிரதிஸ்டை செய்யப்படும் கருவறையை படம்பிடித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டிருக்கிறார். இந்தியாவின் தலைநகரமே இனி அயோத்தி தான் என்ற நோக்கத்தோடு மதச்சார்பற்ற இந்தியாவை ‘மதவாத பாரத்’- ஆக மாற்றும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியே இது. இது இந்துக்களின் தேசம் என்றும் முரசறைய அறிவிக்கிறது இந்த பார்ப்பனிய அரசு.

ராமனின் அயோத்தி ஏதோ இந்துக்களின் புனித நகரமாக இருந்ததைப் போல இந்துத்துவாவாதிகளில் சித்தரிப்பது வரலாற்றுப் புரட்டு என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். உண்மையில் முஸ்லிம்கள், புத்தர்கள், சமணர்களின் பண்பாட்டு மையமாகவும் அயோத்தி இருந்திருக்கிறது.

முகலாய சாம்ராஜ்யத்தின் மூன்றாவது அரசருக்கு சொந்தமான ஆஃபிம் கோத்தி என்ற கட்டடம் இன்றும் அயோத்தியில் இருக்கிறது. அதாவது அபீன் அரண்மனை என்பது இதன் அர்த்தம். அரசரின் பெயர் சுஜா-உத்-தவுலா (1732-75) பிரிட்டீஷ் அரசு மன்னரை துன்புறுத்தி அபீன் என்ற போதைப் பொருளை விற்பனை செய்யத் தொடங்கியது. இப்போது இந்த கட்டடத்தில் ‘போதைப் பொருள் கண்காணிப்பு மய்யம்’ என்ற அரசு அலுவலகம் செயல்படுகிறது. 45 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்த மாளிகை சீரழிந்து பராமரிப்பின்றி கிடக்கிறது. 1764 பக்சர் யுத்தத்தில் பிரிட்டீஷ் படைகள் இஸ்லாமிய மன்னரை தோற்கடித்து இந்த பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். முகலாய கட்டடக் கலையோடு அமைந்த அரண்மனை இது. அயோத்தியில் இரட்டைத் தலைநகரங்களில் ஒன்றான ஃபைசாபாத்தில் இருந்த இந்த மாளிகையில் அரசர் ஓய்வெடுப்பது வழக்கம். அருகே இஸ்லாமிய கட்டடக் கலையுடன் தூண் ஒன்றும், மன்னர் காலத்தில் இஸ்லாமிய கலாச்சார விழா நடந்த மலர்த் தோட்டமும் இருக்கிறது. ‘அவாத்’ என்று அழைக்கப்படும் இந்தப்பகுதியில் அமைந்துள்ள ‘அனுமான் கிரி’ என்ற இந்த கோயிலுக்கு இஸ்லாமியர்கள் படையெடுத்துவந்த போது ‘அவாத்’ தை ஆண்ட இஸ்லாம் மன்னர் சொந்த இஸ்லாம் மத மன்னர்களை எதிர்கொண்டு தாக்கி மீட்டுத்தந்தார் என்பது வரலாறு. 18ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த அனுமான் கோயிலுக்கு இடம், நிதியுதவி வழங்கியது சுஜா-உத்-தவுலா வின் தந்தை. அயோத்தி நகரம். சுஜா-உத்-தவுலா, காலத்தில் இந்து – முஸ்லீம் ஒற்றுமையை வளர்த்தெடுத்தது. இது முஸ்லீம் சமூகத்தினர் மகிழ்ச்சியாக ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள். இந்து ஊர்வலங்களுக்கு பயன்படுத்தப்பட்ட குதிரைகளை முஸ்லீம்களே வழங்கினர். இதே பகுதியில் ‘ஜன் மோர்ச்சா’ என்ற பத்திரிக்கையை நடத்திவரும் ‘இந்துமத’ ஆசிரியர் கிருஷ்ணா பிரதாப் சிங் தனது ஏட்டில் இந்த வரலாறுகளை பதிவு செய்துள்ளார்.

இஸ்லாமியர்களின் ஒரு பிரிவிரான ‘சுஃபி’ பிரிவினருக்கு சொந்தமான வழிபாட்டு இடங்கள் அயோத்தியில் இப்போதும் காணப்படுகின்றன. இங்கே உள்ள சையத் இப்ராகிம் ஷா வழிபாட்டு மையத்தில் அனைத்து மதத்தினரும் வழிபட்டு சென்றனர். ‘சுஃபி’ மதகுரு நவிருதின் சகோதிரியான பதிபூவா (1274-1337) இந்த பகுதியில் கைவிடப்பட்டவர்களுக்கான இல்லம் ஒன்றை தொடங்கி நடத்தினார். அதில் 35 அனாதை குழந்தைகளுக்கு மத வேறுபாடு இன்றி உதவிகள் வழங்கப்பட்டன.

அயோத்தியிலிருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சரயு நதிக் கரையில் ஏராளமான சிறு சிறு இந்துக் கோயில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஒடுக்கப்பட்ட ஜாதியினரும் தங்களுக்காக இந்த கோயில்களை உருவாக்கிக் கொண்டனர். பார்ப்பனர் பிற ஜாதியினரை கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுத்ததை எதிர்த்து இந்தக் கோயில்கள் இப்போதும், துணித் துவைப்போர் கோயில், சவரம் செய்வோர் கோயில், தச்சர் கோயில் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

‘ராமன்’ புனிதக் கடவுள் ; தேசியக் கடவுள் என்ற புனைவுகளை எதிர்த்தவர்களும் ஏராளம் உண்டு. இப்போதும் நேபாள எல்லையில் உள்ள ‘ஜனக்பூர்’ பகுதியில் வாழும் மக்கள் தங்கள் வீட்டுப் பெண்களை அயோத்தியில் நடக்கும் திருமணங்களுக்கு அனுமதிப்பதில்லை. ஜனக்பூர் சீதையின் பிறப்பிடமாக நம்பப்படுகிறது. ராமன் – சீதையை கடும் துயரத்துக்கும் அவலத்துக்கும் உள்ளாக்கினான் என்பதே இந்த மக்கள் கருத்து.

அயோத்தி புத்தர்களுடன் தொடர்புடைய ஊராக இருந்திருக்கிறது. அயோத்தி ஒரு காலத்தில் ‘சகேதா’ என்ற பெயரில் அழைக்கப்பட்டது. புத்தர்களைப் பற்றி விரிவாக பேசும் பழம்பெரும் புத்த காவியம் ‘மகாஜனபதா’-வில் புத்தரின் தந்தை சுத்தோனந்தா மற்றும் புத்தர் பற்றிய குறிப்புகள் பதியப்பட்டுள்ளன. மழைக்காலங்களில் புத்தர் தங்கும் இடம் அயோத்தியாகவே இருந்திருக்கிறது.

2018ம் ஆண்டு அயோத்தியில் புத்த மதத்தைச் சார்ந்த வினீத் குமார் மவுரியா அயோத்தி – புத்தர்களுக்கு உரிய இடம் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அயோத்தியில் புத்தர் கோயில்களை இடித்து இந்து கோயில்களாக மாற்றிவிட்டனர் என்பது அவரது வழக்கு. சீனப் பயணிகள் ஃபாகியான், யுவான் சுவாங் இருவரும் தங்கள் பயணக் குறிப்புகளில் சமண, புத்த மத வழிபாட்டு இடங்களை தகர்த்து, இந்துக் கோயிகளை கட்டியதாக பதிவு செய்துள்ளனர்.

அலிகார் பல்கலைகழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் நதீம் ரேசாவி அயோத்தி பல மதங்களின் கலாச்சார மையம் இந்துக்களுக்கு மட்டுமே உரித்தானது அல்ல, தொல்பொருள் துறை இந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும், ஆனால் அது ஒரு சார்பாக செயல்படுகிறது என்று குற்றம்சாட்டுகிறார். உத்திரபிரதேச சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை இயக்குநர் முகேஷ் மேஷ்ராம், உபி தொல்பொருள் துறை முன்னாள் மண்டல இயக்குனர் கே.கே.முகமது ஆகியோரும் இந்த கருத்தை தொடர்ந்து வலியுறுத்தியும், உபி மாநில ஆட்சியோ, ஒன்றிய ஆட்சியோ எந்த ஆர்வமும் காட்டாமல், அயோத்தி இந்துக்களுக்கு மட்டுமே என்ற மதவெறி அரசியலில் தீவிரம் காட்டுகிறது. அதன் எதிரொலி தான் இந்த அயோத்தி ராமன் கோயில் திறப்பு விழா?

நீதிமன்றங்களின் குழப்பம் – முரண்பாடுகள் நிறைந்த தீர்ப்பும், மதவெறி அரசியலுக்குத் துணை போகிறது. மக்கள் பிரச்சனைகளிருந்து திசை திருப்பும் மதவாத அரசியலை எதிர்த்து வலிமையான இயக்கம் உருவாக வேண்டும். வரலாற்றுப் புரட்டுகளை அம்பலப்படுத்த வேண்டியது அவசியம்.

(தகவலுக்கு ஆதாரம் : ‘பிரண்ட் லைன் : டிசம்பர் 15,2023ல் வெளிவந்த கட்டுரை’)

## கழகப் பொறுப்பாளர் விஜயகுமார் தந்தை முடிவெய்தினார்.



கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமாரின் தந்தை இராம. கண்ணதாசன் (வயது 68) 09.12.2023 அதிகாலை 4 மணியளவில் கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில் உள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார்.

அவரது உடலுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினார்.

பேராசிரியர் சரஸ்வதி, கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி, தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன் மற்றும் கடலூர், சேலம், சென்னை மாவட்டத் தோழர்கள் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

## கழக ஏட்டுக்கு சந்தா சேர்க்க திருவல்லிக்கேணி பகுதித் தோழர்கள் முடிவு

திருவல்லிக்கேணி : திருவல்லிக்கேணி பகுதிக் கழக கலந்துரையாடல் கூட்டம் 30.11.2023 வியாழன் மாலை 6 மணிக்கு வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில் தோழர் இராஜேசு தலைமையில் நடைபெற்றது..

கூட்டத்தில் கழக வார ஏடான “புரட்சிப் பெரியார் முழக்கம்” இதழுக்கு 500 சந்தா திரட்டுவது எனவும், வருகிற 2024ம் ஆண்டிற்கான பொங்கல் விழா சிறப்பாக நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இதில் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, பகுதிச் செயலாளர் அருண்குமார் உள்ளிட்ட பகுதிக் கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

## இராமாயணம்
## ஆரிய - திராவிடப் போர்

*“ஆரியர்களால் தோற்கடிக்கப் பட்ட எதிரிகளாகிய திராவிடர் களை, தங்களின் புத்தகங்களில் திராவிடர்கள் - தஸ்யூக்கள் என்றும், தானவர்கள் என்றும், ராட்சதர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்”*

*“ஆரியக் கவிகள் திராவிடர்கள் மீது கொண்டிருந்த வெருப்பை இது காட்டுகிறது. ஏனெனில் ஆரியர்கள் திராவிட நாட்டில் சிறுக சிறுக நுழைந்து, ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்.”*

(சி.எஸ்.சீனிவாசாச்சாரி எம்.ஏ., எம்.எஸ். ராமசாமி அய்யங்கார் எம்.ஏ., ஆகிய சரித்திர போதகர்கள் எழுதிய “இந்திய சரித்திர முதல் பாகம் எனும் புத்தகத்தில் ‘இந்து இந்தியா’ எனும் தலைப்பில் 16,17வது பக்கங்களில்)

# வள்ளுவருக்குப் பூணூல் போடுவதைத் தடுத்த கலைஞர்

*(கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நீர்வளத்துறை வெளியிட்டுள்ள மலரில் "பகுத்தறிவு சீர்த்திருத்தச் செம்மல்" என்ற தலைப்பில் விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரை)*

பகுத்தறிவு என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று கலைஞர் கொடுத்த விளக்கத்தில் இருந்தே இந்த கட்டுரையை தொடங்கலாம் என்று கருதுகிறேன். "எல்லாவற்றையும் பகுத்தறியத்தான் பகுத்தறிவு. கடவுள் உண்டா இல்லையா என்று ஆராயக் கூட பகுத்தறிவு தேவைப்படுகிறது. சிந்திக்கிற, பகுத்தறிகிற ஆற்றலைப் பெற்றதால்தான் மனிதன் மற்ற உயிரினங்களை விட மேலானவனாக மனிதன் கருதப்படுகிறான். அப்படிப்பட்ட அந்த ஆற்றலை எதிர்கால சமுதாயம் வாழ்வதற்குப் பயன்படுத்த வேண்டும்." 1.1.81 அன்று சென்னையில் நடைபெற்ற பகுத்தறிவாளர் கழக மாநாட்டை தொடங்கிவைத்து கலைஞர் குறிப்பிட்டவை இவை.

எழுத்தாளர், பத்திரிகையாளர், வசனகர்த்தா, அரசியலாளர், கவிஞர், பாடலாசிரியர் என கலைஞருக்கு பன்முக அடையாளங்கள் இருந்தாலும், தன்னை அவர் எவ்வாறு அடையாளப்படுத்திக் கொண்டார் என்பதில் இருந்துதான் கலைஞரின் வரலாற்றை அணுக வேண்டும். "5 முறை முதல்வராக இருந்தேன், 50 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்தேன், திரைப்படங்களுக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதியிருக்கிறேன்" என்றெல்லாம் தன்னைப்பற்றிய அடையாளத்திற்காக கலைஞர் ஒருநாளும் குறிப்பிட்டதில்லை. கலைஞர் யார் என்று கேட்பவர்களுக்கு, அவர் கொடுத்த பதில், "நான் ஒரு மானமிகு சுயமரியாதைக்காரன்" என்பதுதான்.

அந்த 'சுயமரியாதைக்காரன்' என்ற உணர்வு பகுத்தறிவு சிந்தனையில் இருந்து உதிப்பது. கலைஞர் தன்னை ஒரு நாத்திகராக பிரகடனப்படுத்திக் கொண்டதை மட்டுமே பகுத்தறிவு என்று சுருக்கிவிட முடியாது. அது ஒரு சிறிய பகுதிதான். ஆனால் அந்த சிறுபகுதிக்கும் மிக நீண்ட வரலாறு இருக்கிறது. கலைஞரின் பள்ளிப் பருவத்தில் இருந்து அதற்கு எண்ணற்ற உதாரணங்கள் இருக்கின்றன. "யார் சொல்லியிருந்தாலும், எங்கு படித்திருந்தாலும் நானே சொன்னாலும் உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே" என்பதுதான் பெரியாரின் பகுத்தறிவு சிந்தனை. அப்படி, பெரியாரை அடையும் (ஈரோடு செல்வதற்கு) முன்னரே, பெரியார் கூறிய பகுத்தாயும் சிந்தனை கலைஞருக்கு இருந்திருக்கிறது.

## வாரியாருக்கு கிடுக்குப்பிடி

பள்ளிக்காலத்தில் திருவாரூருக்குச் சென்ற கிருபானந்த வாரியாரின் உரையைக் கேட்க கலைஞர் சென்றிருக்கிறார். கிருபானந்த வாரியார் செல்லும் இடங்களிலும் அவர் பேசும் அறிவியலுக்கு புறம்பான, மூடநம்பிக்கை கருத்துக்களை திராவிடர் கழகத்தினர் நேருக்கு நேர் எதிர்க்கேள்விகளை எழுப்பி திக்குமுக்காட வைத்துக் கொண்டிருந்த காலம் அது. பெரியார் தொண்டர்களின் அந்த துணிச்சல் பள்ளிச் சிறுவனான கலைஞரையும் விட்டுவைக்கவில்லை. கிருபானந்த வாரியார் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்த போது, உயிருள்ள பறவை, மிருகங்களை மனிதன் உண்பதற்கு கடவுள் படைக்கவில்லை என்று கூறியிருக்கிறார். அப்படியானால் சிங்கத்திற்கு கடவுள்படைத்தஉணவுஎன்னஎன்றுகலைஞர் உடனே கேட்டிருக்கிறார். ஆனால் கிருபானந்த வாரியார் கலைஞருக்கு பதில் சொல்லாமல் அடுத்ததைப் பேசினார்."அப்படியானால் தாவரங்களுக்கு உயிர் இருக்கிறதே அதை மட்டும் சாப்பிடலாமா என்று நீங்கள் கேட்கலாம். காய்கறிகளைப் பறித்த பின்பும் அவற்றின் வளர்ச்சி தடைபடுவதில்லை, எனவே சாப்பிடலாம்" என்று கூறியிருக்கிறார். கலைஞருக்கு மீண்டும் சந்தேகம் வந்துவிட்டது. "கீரைத்தண்டை வேரோடு சாப்பிடுகிறோமே! அது எப்படி?" எனக் கேட்டிருக்கிறார் கலைஞர். கிருபானந்த வாரியார் அப்போது மட்டுமல்ல, எப்போதுமே அதற்குப் பதிலே சொல்லவில்லை.

## சுளீர் பதில்கள்

கலைஞரின் பேராற்றல் என்பது நொடிப்பொழுதில் அவர் வைக்கும் சுளீர் பதில்கள் தான். பத்திரிகையாளர் சந்திப்பு முதல் மேடைப் பேச்சுக்கள்



வரை பல இடங்களில் ஓரிரு வார்த்தைகளில், அவருடைய பாணியில் மூடத்தனங்களின் மீது ஓங்கி ஒரு சம்மட்டி அடியை கொடுத்துவிடுவார். வள்ளுவர் வேடம் தரித்த சிறுவன், அணிந்திருந்த பூநூலை பிடித்து இழுத்து ஒரு நமட்டுச் சிரிப்பை கலைஞர் சிரிக்கும் படம் இப்போதும் மிகப் பிரபலமானது. புத்தனையே விழுங்கிச் செரித்த கூட்டத்திடம் இருந்து வள்ளுவருக்குப் பூநூலை மாட்டிவிட முடியாது காத்தவர் கலைஞர் அல்லவோ!

ராமன் எந்த பொறியியல் கல்லூரியில் படித்தான் என்று கலைஞர் கேட்ட வார்த்தைகள் இன்னும் எத்தனை நூற்றாண்டுகளுக்கு கொள்கை எதிரிகளின் தூக்கம் தொலைக்கும் என்று யாரால்தான் கணக்கிட முடியும்? அதுபோல கலைஞர் வைத்த சூடு ஒன்றல்ல, இரண்டல்ல. தீபாவளிக்கு கூட வாழ்த்துச் சொல்லிராத கலைஞரை, விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தை தொடங்கிவைக்க நேரில் வருமாறு ஒருமுறை அழைத்தார் ராமகோபாலன். "உங்கள் ஆண்டவன் நேரில் வந்தால், இந்த 'ஆண்ட'வனும் (ஆட்சியாளன்) நேரில் வருகிறேன்" என்று அவருக்கே உரிய பாணியில் பதில் கொடுத்து அனுப்பிவிட்டார்

## ஆண்டவனுக்கே அரசு பாதுகாப்பு

சட்டப் பேரவையிலும் தன்னுடைய பகுத்தறிவு சிந்தனைகளை எல்லோரும் ரசிக்கும் வகையிலும், ஆழ்ந்து யோசிக்கும் வகையிலும் பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறார் கலைஞர். 1997-ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்டப்பேரவையில் அறநிலையத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில், மதுரை மீனாட்சி கோயிலுக்கு சென்ற

**• கிருபானந்த வாரியருக்கு கிடுக்குப்பிடி போட்டார் கலைஞர்**

**• சுயமரியாதை உணர்வுக்கு காரணம் – கலைஞரின் பகுத்தறிவு சிந்தனையே**

**• திருவரங்கத்தில் துயிலும் நிலையில் உள்ள ரங்கநாதன் ஏன் எழுந்துவந்து பக்தர்களுக்கு உதவவில்லை என்று பேரவையில் கேட்டவர் கலைஞர்**

**• மத மாற்றத்துக்கு திராவிட இயக்கமே காரணம் என்று துக்ளக் 'சோ' எழுதியதற்கு விரிவான பதில் அளித்தார் கலைஞர்**

குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு கெடுபிடிகள் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியெழுப்பினார். ஆண்டவன் கொடுக்க முடியாத பாதுகாப்பையா ஆட்சியாளர்கள் கொடுத்துவிடப் போகிறீர்கள் என அவர் கேட்க, "ஆண்டவனுக்கே தமிழ்நாடு காவல்துறைதானே பாதுகாப்பு கொடுக்க வேண்டியுள்ளது? எவ்வளவு சிலைகள் களவாடப்படுகின்றன. பொன், ஆபரணங்கள் களவு போயுள்ளன? காவல்துறைதானே கண்டுபிடித்துள்ளது?" என எதிர்க்கேள்வி எழுப்பினார். கடவுள் என்பது வெறும் கற்சிலைதான் என்று இதைவிட வெளிப்படையாக எப்படிச் சொல்லிவிட முடியும்?

இதுபோன்ற பல தருவாயில் நேரடியாக கடவுள்களை கேள்விக்குட்படுத்தியிருக்கிறார் கலைஞர். "ஆண்டவனாக இருந்தால் லாபம்தான். மக்கள் எந்தக் குறையை சொன்னாலும் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கலாம், படுத்திருக்கலாம், தூங்கிக் கொண்டிருக்கலாம். திருவரங்கத்திலே போய், ஆண்டவனிடத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் முறையிடுகிறார்களே, அங்கே ரங்கநாதர் எழுந்து என்ன செய்தார் என்று யாராவது கேட்டிருக்கிறார்களா?" என்ற கலைஞரின் கேள்விக்கு பதில்சொல்ல இன்று வரை யாரும் வரவில்லை.

கடவுளைப் பற்றிய சந்தேகம் ஏன் வருகிறது என்பதற்கும் கலைஞர் ஒரு அற்புதமான கேள்வி எழுப்பியிருக்கிறார். "கடத்தலில் ஒரு பகுதியை காணிக்கை செலுத்திவிட்டு, பழனிக்கு காவடி எடுப்பவனும் திருடியபோது சிக்கிக் கொள்ளாததற்காக திருப்பதி உண்டியலில் பணம் போடுகிறனும் பக்தர்களாக வேஷம் போடும் நாட்டில் கடவுளைப் பற்றிய சந்தேகம் வருவது இயற்கைதானே?" என்று பாமரர்களையும் பகுத்தறிவாளர்களாக்க சிந்திக்கத் தூண்டிய கலைஞரின் சிந்தனைகள் ஏராளம் இருக்கின்றன.

40 ஆண்டுகளுக்கு முன்பு கண் சிகிச்சைக்காக கலைஞர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில், "கடவுளை நம்பாததால்தான் இவ்வளவு சோதனை, இனியாவது கடவுளை நம்புங்கள்" என்று கூறியிருக்கிறார் செவிலியர். "உங்கள் அன்புக்கு நன்றி. சிகிச்சைக்கு வந்திருக்கிற இங்குள்ள மற்றவர்களும் என்னைப் போலத்தானே?" என கலைஞர் கேட்க, அங்கிருந்த அனைவருமே சிரித்திருக்கிறார்கள்.

வெறுமனே சிரிக்க வைப்பவையாக மட்டுமே கலைஞரின் பகுத்தறிவு சிந்தனைகள் இருந்ததில்லை. சமூக எதார்த்தங்களில் ஜாதியம், பெண்ணடிமைத்தனம் எப்படியெல்லாம் பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதையும் தனது பேச்சின் வழியே, எழுத்தின் வழியே செயல்பாட்டின் வழியே கலைஞர் வெளிக்காட்டிக்கொண்டே இருந்தார். "மீனாட்சிபுரம் மதமாற்றத்திற்கு திமுகவும், திகவும் செய்த அழிவு வேலைகள்தான் காரணம்" என்றும், "தமிழ்நாட்டு மக்கள் ஒருவிதமான அசிங்க நாத்திகத்துக்கு பலியானதன் விளைவுதான் மீனாட்சிபுரம் மதமாற்றம்" என்றும் 'சண்டே' ஆங்கில இதழில் 'சோ' பல அவதூறுகளை அள்ளி வீசி கட்டுரையாக்கி இருந்தார். "ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) பார்ப்பனிய எதிர்ப்பை விதைத்தது, ஜஸ்டிஸ் கட்சி பிரிட்டிசாருக்கு புகழ்பாடியது, சினிமாவை நாத்திகப் பரப்புரைக்கு தி.மு.க பயன்படுத்திக் கொண்டது, இந்து மதக் கடவுள்கள் மீது பெரியார் ஆபாச அர்ச்சனை பொழிந்துவிட்டார்" என்றெல்லாம் அடுக்கடுக்கான விமர்சனங்களை அந்த கட்டுரையில் 'சோ' வைத்திருந்தார்.

சோ-வின் இந்த அவதூறு கருத்துக்களுக்கு கலைஞரே நேரடியாகப் பதில் கொடுத்தார். அந்த பதிலடியானது 'யாரால் யாரால் யாரால்?' என்ற தலைப்பில் 1981-ஆம் ஆண்டில் நூலாகவே வந்திருக்கிறது. "தும்பும் தூசியும் ஒட்டடையும் நிறைந்துள்ள வீட்டில், அவற்றையெல்லாம் அகற்றிவிட்டு இல்லத்தைத் தூய்மையாக வைத்திட முயல்வது அழிவு வேலை என்று 'சோ'வின் அகராதியில் அச்சாகியிருக்கிறது போலும்" என சாடினார் கலைஞர். திராவிடர் இயக்கம் செய்துகொண்டிருப்பது சீர்திருத்த வேலை என பதிலளித்தார். "சாதிக்கரையானும் புராண ஆபாசப் புற்றுக்களும் சந்தன தாம்பூலம் பால் பழம் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டியவைகள் என்று நண்பர் சோ வாதிடுகிறாரா?" என்றும் கேள்வி எழுப்பினார் கலைஞர். "மீனாட்சிபுரம் மதமாற்றத்துக்கு திராவிடர் இயக்கம் காரணம் என்றால், அம்பேத்கர் பவுத்தம் தழுவியதற்கும் நாங்கள்தான் காரணமா? திமுகவும், திகவும் தோன்றுவதற்கு முன்பே வரலாறு நெடுக மதமாற்றம் நடந்திருக்கிறதே! அதற்கெல்லாம் நாங்கள்தான் காரணமா? இந்துமத ஆதிக்கக்காரர்கள் தங்கள், தவறை மறைக்கவும் பன்னெடுங்காலமாகச் சாத்திர சம்பிரதாயங்கள் பெயரால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் நடத்திய கோரம் தாங்க முடியாமல்தான் இத்தகைய மத மாற்றங்கள் ஏற்பட்டன" என்றும் நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல 'சோ'-வுக்கு பதிலடி கொடுத்தார்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# நங்கவள்ளியில் அம்பேத்கர் நினைவுநாள் கூட்டம்



**சேலம் :** நங்கவள்ளி ஒன்றியக் கழக சார்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் 67வது நினைவு நாளை ஒட்டி எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் 06.12.2023 அன்று புதன் மாலை 4 மணியளவில் வனவாசி மேல் ரோடில் நடைபெற்றது.

டி.கே.ஆர் குழுவின் இசை நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது. கூட்டத்திற்கு நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன் தலைமை வகித்தார், ஒன்றிய பொறுப்பாளர் ராஜேந்திரன், கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் விஜயகுமார், வனவாசி நகர தலைவர் செந்தில்குமார், நங்கவள்ளி அ.செ. சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், நங்கவள்ளி நகரச் செயலாளர் சு.பிரபாகரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை ஈசுவரன், தலைமைக்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.சக்திவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி சீ.அன்பு, சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவபிரகாஷ், CPI நங்கவள்ளி ஒன்றியக்குழு உறுப்பினர் கிருஷ்ணன், திராவிடத் தமிழர் கட்சி மாநில அமைப்பு செயலாளர் சீ.செல்வமுருகேசன், வனவாசி நகர செயலாளர் பழ.உமாசங்கர் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள். நிறைவாக சேலம் மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை நன்றி கூறினார்.

நங்கவள்ளி பகுதி அருள்குமார், குமார், பேரறிவாளன், தமிழருவி, நிலவன், தமிழச்செல்வி, வனவாசி பகுதி பன்னீர்செல்வம், தங்கமாபுரிப்பட்டினம் ராமச்சந்திரன், நாகராஜ், மேட்டூர் பகுதி முத்துராஜ், வெள்ளார் பகுதி சிவ சண்முகம் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மாணவர்கள், பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் கூட்டத்தில் பேசப்பட்ட கருத்துக்களை கேட்டறிந்தனர்.

## உயர்நீதிமன்றங்களில்

**(2018 முதல் 2023 டிசம்பர் 02 வரை)**

### 650 நீதிபதிகள் நியமனம்

- உயர் ஜாதியினர் 75.69% (492 பேர்)
- ஓபிசி பிரிவினர் 11.7% (76 பேர்)
- எஸ்.சி பிரிவினர் 3.54% (23 பேர்)
- எஸ்.டி பிரிவினர் 1.54% (10 பேர்)
- சிறுபான்மை சமூகங்களை சேர்ந்தவர்கள் – 5.54% (36 பேர்)
- எந்த பிரிவிலும் வராத நீதிபதிகள் எண்ணிக்கை – 13 (பேர்)
- உயர்நீதிமன்றங்களில் பெண் நீதிபதிகள் – 14.1% (111 பேர்)
- உச்சநீதிமன்றத்தில் பெண் நீதிபதிகள் – 8.82% (03 பேர்)

### அதிக பெண் நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றங்கள்

- பஞ்சாப் – ஹரியானா உயர்நீதிமன்றம் – 12 பேர்
- சென்னை உயர்நீதிமன்றம் – 12 பேர்
- மும்பை உயர்நீதிமன்றம் – 11 பேர்

Source : RS/MINISTRY OF LAW (TILL DEC 2023)

# நம்பியூரில் சனாதன மோசடிகள் விளக்கம்

**ஈரோடு வடக்கு :** ஈரோடு வடக்கு மாவட்டக் கழக சார்பாக 03.12.2023 ஞாயிறு மாலை 04.30 மணியளவில் நம்பியூர் அஞ்சானூர் சமத்துவபுரத்தில் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

கூடக்கரை கலைச்செல்வன் தலைமை வகித்தார். மாவட்டக் கழக அமைப்பாளர் கோபி நிவாசு, நம்பியூர் ரமேசு ஆகியோர் தொடக்க உரையாற்றினார்.

தொடர்ந்து தலைமைக் கழக பேச்சாளர் கா.சு.வேலுச்சாமி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அடுத்தக் கூட்டம் கூடக்கரையில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கூடக்கரை பகுதி திமுக முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சுப்பு (எ) சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். தொடர்ந்து கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் நிறைவுரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார், கோபி அருளானந்தம், சத்தி முத்து, சித்தா பழனிச்சாமி, சின்னதம்பி, நம்பியூர் ஒன்றியச் செயலாளர் இரமேஷ், சிவராஜ், கூடக்கரை செல்வன், வழக்குரைஞர் தமிழரசன், பன்னீர் செல்வம், இராவணன், ராஜன் பாபு, குட்டி, புலவன்சிறை நடராஜன், மயில்சாமி, விஜயகுமார், அறிவரசன், யாழ்திலீபன், நம்பியூர் கதிர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மதுரையில் சட்ட எரிப்பு நாள்

## கழகத் தலைவர் பங்கேற்பு



1957ல் ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகள் எரித்து சிறை சென்ற - உயிர்நீத்த பெரியார் தொண்டர்களின் வீரஞ்செறிந்த வரலாற்றை நினைவுகூறும் சிறப்புக் கருத்தரங்கம் 10.12.2023 ஞாயிறு அன்று மாலை 5 மணிக்கு மதுரை மணியம்மை பள்ளியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு மாவட்டக் கழக காப்பாளர் தளபதி தலைமை தாங்கினார், வாசுகி முன்னிலை வகித்தார். மாவட்டத் தலைவர் காமாட்சி பாண்டி வரவேற்புரையாற்றினார். புரட்சிக் கவிஞர் பேரவை நாகபாலன், புரட்சிக் கவிஞர் மன்றம் பொறுப்பாளரும், மணியம்மை பள்ளி தாளாளருமான வரதராசன் ஆகியோர் தொடக்கவுரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவு எரிப்பு போராட்டத்திற்கான காரணங்களையும், பெரியார் தொண்டர்களின் வீரஞ் செறிந்த போராட்ட வரலாற்றையும் நினைவு கூர்ந்து சிறப்புரையாற்றினார்.

முன்னதாக கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய “அம்பேத்கருக்கு இந்து மதச் சாயம் பூசும் வரலாற்று திரிபுகளுக்கு மறுப்பு” நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் திருவெறும்பூர் அரசெழிலன் ஆகியோர் வெளியிட தோழமை இயக்கத் தலைவர்கள் பெற்றுக் கொண்டனர். (நூலின் 500 படிகளை அச்சிட்டு கழகத்திற்கு நன்கொடையாக வழங்கினார் தோழர் அரசெழிலன்) மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி நன்றியுரை கூறினார்.

முருகேசன், வேங்கைமாறன், மது, விஜய், பரத், செல்வ குமார், மருது பாண்டி, திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் மருத மூர்த்தி உள்ளிட்ட கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் திரளாக பங்கேற்றனர். மதுரை மாவட்டக் கழகம் தொடர்ந்து ஐந்தாண்டுகளாக சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 15, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran